# சீ.வீ.கே. சிவஞானம்
# සී. වී. කේ. සිවඥානම්
# C.V.K. Sivagnanam

600

அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை
සභාපති, උතුරු පළාත් සභාව
Chairman, Northern Provincial Council


எனது இல / මගේ අංකය / My No }

உமது இல / ඔබේ අංකය / Your No }

திகதி / දිනය / Date }

10.10.2014

கௌரவ எம்.கே.சிவாஜிலிங்கம் அவர்கள்

உறுப்பினர்

வடக்கு மாகாண சபை.

கடந்த 09.10.2014ம் திகதிய வடக்கு மாகாண சபையில் சமர்ப்பிக்கவென அனுப்பிவைத்த பிரேரணை தொடர்பானது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை எமக்குத் தெரியப்படுத்திய முடிவின் பிரதி இத்துடன் இணைக்கப்படுகிறது. இது சம்பந்தமாக ஏதாவது கருத்துத் தெரிவிக்க விரும்பின் எம்முடன் அல்லாமல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி!

*சீ.வீ.கே.சிவஞானம்*

அவைத் தலைவர்

வடக்கு மாகாண சபை.

சீ.வீ.கந்தையா சிவஞானம்
அவைத் தலைவர்
வடக்கு மாகாண சபை


A9 வீதி, கைதடி. ( யாழ்ப்பாணம் )
A9 පාර, කයිතඩි. ( යාපනය )
A9 Road, Kaithady. ( Jaffna )

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / e - mail } cvkayes@gmail.com

தொலைபேசி / දුරකතන / Telephone } 021 205 7084 / 021 205 7081 (207,208)

தொலைநகல் / ෆැක්ස් / Fax } 021 205 7086

திரு. சிவாஜிலிங்கத்தினால் பிரேரிக்கப்பட்ட தீர்மானத்தை குறித்து சட்ட ஆலோசனை பெறப்பட்டு இந்த குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவே த. தே . கூட்டமைப்பின் ஆராய்ந்த நிலைப்பாடாகும்.

1. "இனப்படுகொலை" என்ற சொல்லுக்கு சமூக, அரசியல் ரீதியிலான பல வரைவிலக்கணங்கள் இருந்த போதிலும், அதற்க்கான சட்ட வியாக்கியமானது இனப்படுகொலை சமலாயத்தின் 2ம் உறுப்புரையிலும்,பொருத்தமான சந்தர்ப்பங்களில் மற்றைய சர்வதேச ஆவணங்களிலும் காணப்படுகிறது.

2. இலங்கையில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை இந்த விரிவாக்கப்பட்ட சமூக அரசியல் வரைவிலக்கனங்களில் தாம் தெரிந்து கொள்ளும் ஒரு கூம்புக் கண்ணாடிக்கூடாக கண்டு கொள்ளும் உரித்து, தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினருக்கும்,தமிழ் மக்களுக்கும், இலங்கையின் அனைத்து பிரஜைகளுக்கும், அனைத்துலக சமூகத்தினருக்கும் உண்டு. இவ்வுரிமையை அவர்கள் அடிக்கடி உபயோகிப்பதுண்டு.

3. சர்வதேச குற்றங்களின் விசாரணை ஒன்றுக்கு பொருத்தமான வரைவிலக்கணம், இனப்படுகொலை சமாலயத்திலும் ஏனைய சர்வதேச ஆவணங்களிலும் காணப்படும் வரைவிலக்கணம் மட்டுமேயாகும்.

4. 1948ம் ஆண்டின் இனப்படுகொலை சமலாயத்தின் 2ம் உறுப்புரையில் காணப்படும் செய்கைகள் பல தசாப்பதங்களாக இலங்கை அரசின் செயர்பாட்டளர்களால் தமிழ் மக்கள் மீது இழைக்கப்பட்டு வருவது விவாதத்திற்கு அப்பாற்பட்ட உண்மை.

5. ஐ. நா. செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் தமது அறிக்கையில் இனப்படுகொலை என்ற குற்றம் இழைக்கப்பட்டதர்க்கான நியாயமான சாட்சியம் இருப்பதாக சொல்லவில்லை.தமக்கு கொடுக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட ஆணைக்குள்,இப்படியான குற்றம் புரிவதற்கான

விசேட குற்ற மன செயற்த்திட்ட எண்ணம் இருந்ததற்கான சான்று இல்லாதது இதற்க்கான காரணமாக இருக்கலாம்.

6. யுத்த குற்றங்களும் மனிதபிமானத்திற்கு எதிரான குற்றங்களும் இரு சாராரும் இழைத்ததற்கான நியாயமான சான்று இருப்பதாக இந்த நிபுணர் குழு தீர்மானித்திருக்கிறது. இதில் அரசாங்கத்தின் செயர்ப்பாட்டளர்கள் இழைத்ததாக கூறப்படும் அழிப்பு மற்றும் துன்புறுத்தல் ஆகிய மனிதபிமானத்திக்கு எதிரான குற்றங்களும் அடங்கும்.

7. சர்வதேச குற்றங்களில் உயர்ந்த, தாழ்ந்த படிநிலைகள் இல்லையென்பது எமது நிலைப்பாடாகும்.யுத்த குற்றத்தாலும் மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்களாலும் பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பும் பொறுப்பு கூறுதலும், இனப்படுகொலையால் பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பும் பொறுப்பு கூறுதலும் எவ்விதத்திலும் குறைவு பட்டதல்ல.

8. நிபுணர் குழுவிற்கு கொடுக்கப்பட்ட ஆணையை விட OHCHR இனது விசாரணை விரிவானதும் பொருத்தமான விதத்தில் யுத்த குற்றங்கள்,மனிதபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை சம்பந்தமான விசாரணை நடத்தும் தேவைப்பாட்டை உணர்த்தியுள்ளது.

9. தற்போது OHCHR நடத்தும் விசாரணையில் கருத்தில் எடுக்கப்படும் சட்டம் மற்றும் சான்றுகள் பற்றிய அறிவிப்புகள் அல்லது தீர்மானங்களோ வட மாகாண சபையோ வேறேதாவாது அரசியல் கட்டமைப்போ செய்வது பொருத்தமற்ற செயலாகும் என்று நாம் கருதுகிறோம்.

10. இந்த சர்வதேச விசாரணையின் சுயாதீன செயற்பாட்டையும் அதற்க்கான மதிப்பையும் இப்படியான தீர்மானங்கள் பாதிக்க கூடும்.

11. இந்த சர்வதேச விசாரணைக்கு தமது சாட்சியங்களையும், சமர்ப்பனங்களையும் முறையான விதிகள் மூலம் செய்யுமாறு த.தே. கூட்டமைப்பு பொதுமக்களைத் தொடர்ந்ததும் ஊக்குவிக்கும் .